**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No.1 /2022 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW.3 |
| | Defence |
| | Court |
| Name | வெங்கடேசன் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 25th day of July 2025.

Signature of Witness

Name of the INterpreter: Tmt. Mohana, Gr.III, Bench Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 25th day of July 2025.

Signature of Interpreter

## முதல் விசாரணை

நான் காஞ்சிபுரம் வெள்ளை குலம் தெருவில் வசித்து வருகின்றேன். நான் ஆட்டோ ஓட்டு வருகின்றேன். ஆஜர் எதிர்கள் 1 முதல் 4 மற்றும் 6வது எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அது அசாஆ.2ஆகும். அந்த கையெழுத்தை எதற்காக எப்பொழுது போட்டுக்கொடுத்தேன் என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ளள முதல் கையெழுத்தும் என்னுடையதுதான். அது அசாஆ3ஆகும். அதனை எதற்காக போட்டுக் கொடுத்தேன் என்று தற்போது ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது போலீசார் இது தொடர்பாக என்னை விசாரணை செய்யவில்லை.

அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 22.08.2016 அன்று பகல் 2 மணி அளவில் காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் உள்ள சிவன் கோவில் அருகே இவ்வழக்கின் 1முதல் 6 எதிரிகளை சிவகாஞ்சி காவல் ஆய்வாளர் பிடித்து விசாரணை செய்து கொண்டிருந்தார். அப்போது ஐந்தாவது எதிரி சரத்குமார் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதாக சொன்னதன் அடிப்படையில் காவல் ஆய்வாளர் என்னிடமும் சேகர் என்பவரிடமும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நாங்கள் சாட்சிகளாக இருக்க ஒப்புக்கொண்டோம். ஐந்தாவது எதிரி சரத்குமார் 22.8.2016 அன்று அதிகாலை 3.30 மணி அளவில் ஒலிமுகமது பேட்டை ஈ.பி அலுவலகம் அருகே மதில் சுவரில் அருகே 1 முதல் 6 எதிரிகள் ஒன்று கூடி அந்த பகுதியில் உள்ள வீடுகளை கொள்ளையடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பதுங்கி இருந்ததாகவும், அப்போது சர்வ தீர்த்தங்கரை சார்ந்த பாலச்சந்தர் என்பவர் எங்களை பார்த்து

விடவே நாங்கள் கொள்ளையடிக்காமல் வந்து விட்டோம் என்றும் சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்றார் அவர்கள் சம்பவத்திற்கு பயன்படுத்த வைத்திருந்த ஆயுதங்களை எடுத்து ஆஜர் செய்வதாகவும் தெரிவித்த அடிப்படையில் சம்பவ இடத்தில் வைத்து ஐந்தாவது எதிரி ஆஜர் படுத்திய இரும்பு ராடுகள்-2, கத்தி-2 மற்றும் இரண்டு இரும்பு பைப்பு இரண்டு எண்ணிக்கையுடையது. காவல் ஆய்வாளர் என் முன்னிலையிலும், சேகர் என்பவரின் முன்னிலையிலும் கைப்பற்றி எங்களிடம் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் சாட்சி கையெழுத்து பெற்றதாகவும் அதில் நானும், சேகர் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்து விட்டதாகவும் அது குறித்து காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்ததாகவும் அவருடைய விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 முதல் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.